2017 ஜூன் 29]

ஒப்பந்தம் கடலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை, அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியே உள்ளது. அந்த அடிப்படையில், காட்டாண்டிகுப்பம் பகுதியில் Sattva Agro Expo Private Limited என்ற கம்பெனி ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றது. அந்தத் தொழில் நிறுவனம், கிட்டத்தட்ட 37 பணியாளர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது, அந்நிறுவனத்தில் 300 பேர் வேலை செய்கிறார்கள். கிட்டத்தட்ட 280 பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கின்ற ஒரு நிறுவனமாக, அது செயல்பட்டு வருகின்றது. அந்நிறுவனத்தில் 7,940 சதுர அடியில் processing unit இருக்கிறது; 20,500 சதுர அடியில் packaging unit இருக்கிறது. அந்த அடிப்படையில், அந்த நிறுவனம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 105, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

105—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***1299—திரு. த. மனோ தங்கராஜ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், குலசேகரம் அரசு மருத்துவமனையை வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) புதிதாக வட்டங்கள் உருவாக்கப்படும்போது அந்த வட்டத்திலே உள்ள மருத்துவமனை வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்பது அரசினுடைய கொள்கை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற குலசேகரம் அரசு மருத்துவமனை, விதிமுறைகளைப் பூர்த்தி செய்ய இயலாத காரணத்தினாலே, அதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.

திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட, குலசேகரம் பகுதியில் இருக்கக்கூடிய அரசு மருத்துவமனை, ஒரு தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டிய அனைத்துத் தகுதிகளையும் பெற்றது. ஏற்கெனவே தாலுகா மருத்துவமனையாக இருந்த தக்கலை அரசு மருத்துவமனை, மாவட்ட மருத்துவமனையாக மாற்றப்பட்டவுடன், இதுதான் தலைமை தாலுகா மருத்துவமனையாக மாறியிருக்க வேண்டும். ஆனால், அது வேறு ஒரு மருத்துவமனைக்குச் சென்றுவிட்டது. எனவே, இந்த நேரத்தில் நான் வேண்டிக் கேட்டுக்கொள்வதெல்லாம், குலசேகரம் பகுதி 50–க்கும் மேற்பட்ட மலைவாழ் கிராமங்கள் இருக்கக்கூடிய பகுதி. ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அந்தப் பகுதியைச் சுற்றி வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். அந்த மருத்துவமனையைத் தரம் உயர்த்துவதற்குப் போதுமான இடவசதி அங்கு இருக்கின்றது. இதிலே முக்கியமான பிரச்சினை என்னவென்றால், அந்த மலைக் கிராமங்களில் இருக்கக்கூடிய மக்கள், குறிப்பாக, மகப்பேறு சம்பந்தமாக வரவேண்டுமென்று சொன்னால், மலையிலிருந்து கீழே இறங்கிவந்து, அதற்குப்பிறகு 20 கிலோ மீட்டர் பயணித்து, தக்கலை அரசு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய நெருக்கடியான நிலை இருக்கிறது. இங்கு மகப்பேறு மருத்துவரும் பணியில் இல்லை. எனவே, முழுநேர மகப்பேறு மருத்துவர் கண்டிப்பாக வேண்டும். அதேபோன்று Resident Doctors, அங்கே தங்கியிருக்கக்கூடிய டாக்டர்கள் யாரும் இல்லாத நிலை; அதேபோன்று, சுகாதாரப் பணியாளர்கள் இல்லாத நிலை இருந்துகொண்டிருக்கிறது. இன்னும் எங்களுடைய மாவட்டத்தில் இருக்கக்கூடிய பொதுவான பிரச்சினை, இந்த மருத்துவமனையிலும்

2017 ஜூன் 29]

இருக்கிறது. மருத்துவர்கள் சரியான நேரத்திற்கு வருவதில்லை. இதற்குக் காரணம், சொந்த ஊரிலே இருக்கக்கூடிய மருத்துவர்கள், தனியாக practice *செய்துகொண்டிருப்பதுதான். அதையும் நீங்கள்* regularise *செய்வதற்கு சட்டங்கள் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதி மலைவாழ் மக்கள் சுற்றியிருக்கக்கூடிய பகுதி என்பதைக் கருத்தில்கொண்டு, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தாலுகா மருத்துவமனையாக நிச்சயமாக தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று தங்கள் வாயிலாக அன்போடு கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, ஒவ்வொரு வட்டத்திற்குள்ளும் சிறப்பான மருத்துவ சேவை இருக்கவேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய கொள்கை முடிவு. அந்த அடிப்படையிலேதான், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கல்குளம் வட்டத்தில், மாவட்ட தலைமை மருத்துவமனையாக பத்மநாபபுரம் அரசு மருத்துவமனை இருக்கிறது. அந்த பத்மநாபபுரம் அரசு மருத்துவமனை, உறுப்பினருடைய கல்குளம் வட்டத்தில் இருக்கின்ற ஒரு மருத்துவமனை. அது தமிழ்நாட்டிலே மிகச் சிறப்பாகச் செயல்படக்கூடிய ஒரு மருத்துவமனை; பல விருதுகளையெல்லாம் வாங்கியிருக்கக்கூடிய மருத்துவமனை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற குலசேகரம் மருத்துவமனையிலே இப்போது 7 மருத்துவர்கள் இருக்கிறார்கள். 7 மருத்துவர் பணியிடங்களும் இப்போது நிரப்பப்பட்டிருக்கின்றன என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். பல் மருத்துவர் உள்பட மொத்தம் 8 மருத்துவர்கள் இருக்கிறார்கள். சரியான நேரத்திற்கு மருத்துவர்கள் வருவதில்லை என்று உறுப்பினர் சொல்லியிருக்கிறார். மிகச் சரியான நேரத்திற்குக் கண்டிப்பாக மருத்துவர்கள் வரவேண்டும். இல்லையென்றால், நிச்சயமாக துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர் கோருகின்ற வசதிகள், வரும் காலங்களில் குலசேகரம் மருத்துவமனைக்கு ஆய்வின் அடிப்படையிலே மேற்கொள்ளப்படும் என்பதையும் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.

திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு மகப்பேறு மருத்துவர், Sanitary Worker நியமனம் செய்யப்படவேண்டும். எங்களுடைய மாவட்டத்தில் இருக்கக்கூடிய தக்கலை மருத்துவமனை, மாவட்டத் தலைமை மருத்துவமனை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோன்று தேசிய தரச்சான்று பெற்று சிறப்பாகச் செயல்பட்டு வருகின்ற மருத்துவமனைதான். அங்கு புறநோயாளிகள், உள்நோயாளிகள் என்று அதிகம் பேர் சிகிச்சைக்காக வந்துகொண்டிருக்கிறார்கள். அங்கு இயற்கை மருத்துவப் பிரிவு ஒன்றும் இருக்கிறது. அதற்கான டாக்டர், 2 தெரபிஸ்ட்கள் இப்போது நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். ஆனால், யோகா பயிற்றுவிப்பதற்கோ, நேச்சுரோபதி செய்வதற்கோ அங்கு கட்டட வசதி இல்லை. அதேபோன்று, அங்கு ஓமியோபதி சிகிச்சைக்கும் கட்டடம் இல்லாத ஒரு நிலை இருக்கிறது. அதேபோன்று, அங்கு இருக்கக்கூடிய Lab போதிய இடவசதி இல்லாமல் இருக்கிறது. அது தாலுகா மருத்துவமனையாக இருக்கின்ற நேரத்தில் கட்டப்பட்ட Lab. எனவே, மாவட்ட மருத்துவமனையாகத் தற்போது இருக்கின்ற காரணத்தினால் Lab–க்கும் புதிய கட்டடம் கட்ட வேண்டிய ஓர் அவசியம் இருக்கிறது. அங்கு பல்வேறு டாக்டர்கள் இருந்தாலும், தோல் நோய் பிரிவிற்கு டாக்டர்கள் இல்லாத நிலை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. த. மனோ தங்கராஜ், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். நிறைய பேர் வாய்ப்பு கேட்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வாய்ப்புத் தர முடிவதில்லை.

திரு. த. மனோ தங்கராஜ்: மேலும், அந்த மருத்துவமனைக்கென்று தனியாக ஒரு மின் மாற்றியினை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் மருத்துவமனையில் power fluctuation இருக்கிறது.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்; நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. மனோ தங்கராஜ், நீங்கள் உட்காருங்கள்.

2017 ஜூன் 29]

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *உறுப்பினர் குறிப்பிட்டுக் கொண்டிருக்கின்ற குலசேகரம் மருத்துவமனை, கடந்த ஆண்டுகூட, ஐந்து இலட்சம் ரூபாய் மதிப்பில் மத்திய அரசினுடைய விருதைப் பெற்ற, தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாகச் செயல்படக்கூடிய மருத்துவமனையாகும். நானே நேரிலே சென்று ஆய்வு செய்திருக்கிறேன். கூடுதல் கட்டடங்கள் எல்லாம் கொடுத்துக்கொண்டிருக்கின்றோம். இன்னும் உறுப்பினர் கேட்கின்ற வசதிகள் படிப்படியாக செய்துதரப்படும். இந்த ஆண்டு* JICA *திட்டத்திலே கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 8 கோடியே 81 இலட்சத்து 53 ஆயிரத்து 439 ரூபாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நிதியொதுக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. விரைவிலே அதிக வசதிகள் அந்த மாவட்டத்திற்கும், உறுப்பினர் குறிப்பிடுகின்ற மருத்துவமனைக்கும் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கடையநல்லூர் தொகுதிக்குட்பட்ட புளியறை ஆரம்ப சுகாதார நிலையம் அமைந்துள்ள பகுதியானது, அதிகமான வனப் பகுதிகள் அடங்கிய பகுதியாகும். பழங்குடியின மக்களெல்லாம் வாழக்கூடிய பகுதியாகும். அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திலே பெண் மகப்பேறு மருத்துவர் இல்லை என்று கடந்த ஒரு வருட காலமாக நான் சொல்லிக்கொண்டே வருகின்றேன்; ஆவன செய்வதாகச் சொன்னார்கள். அங்கே பெண் மருத்துவர் இல்லை என்று சொன்னால், அந்தப் பழங்குடியின மக்கள் எங்கே சென்று மகப்பேறு சிகிச்சை பெற முடியும்? எனவே, புளியறை ஆரம்ப சுகாதார நிலையத்தில் பெண் மகப்பேறு மருத்துவரை விரைந்து நியமிக்க வேண்டுமென தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. அபூபக்கர், போதும் உட்காருங்கள். (குறுக்கீடு) கேள்வியை முடியுங்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *எனது தொகுதிக்குட்பட்ட வடகரை வாவா நகரத்திலே இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர். அங்கேயும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துத் தர வேண்டுமென்று*

கேட்டுக்கொள்கிறேன். கடையநல்லூர் மருத்துவமனையில் ஏற்கெனவே, Kidney Dialysis Centre அமைப்பதற்காக M.L.A. fund–லிருந்து நான் ஒரு machine–க்குண்டான தொகையை வழங்கியிருக்கிறேன். மேலும், ஓர் இயந்திரத்தை அரசு சார்பாக வழங்குவதாகத் தெரிவித்திருக்கின்றார்கள். அந்தப் பணியையும் விரைவாக முடித்து, கடையநல்லூர் மருத்துவமனையிலே Kidney Dialysis Centre அமைப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த DialysisCentre–பற்றி சட்டமன்றத்திலே மானியக் கோரிக்கையின்போது மகிழ்ச்சியான அறிவிப்புகளெல்லாம் வரவிருக்கின்றன. புதிய ஆரம்ப சுகாதார நிலையம்; தாங்கள் கேட்ட கோரிக்கை. அது அரசினுடைய கனிவான பரிசீலனையில் இருக்கிறது. மருத்துவர்கள் நியமனம்; இப்போதுதான், சுமார் அரை மணி நேரத்திற்கு முன்னதாக, சட்டமன்றம் கூடுவதற்கு முன்னதாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாக ஓமந்தூரார் அரசு பன்னோக்கு மருத்துவமனைக்கு வந்து, நான் ஏற்கெனவே சொன்னதுபோல 505 சிறப்பு மருத்துவர்கள் (speciality doctors) M.B.,B.S. மருத்துவர்களுக்கு, தமது பொற்கரங்களால் பணி நியமன ஆணையை (மேசையைத் தட்டும் ஒலி) இப்போதுதான் கொடுத்துவிட்டு வந்திருக்கிறார் என்ற நல்ல செய்தியையும் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம் அவர்கள்.

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உள்ளம் என்றொரு ஊர் இருக்கும்; அந்த ஊருக்குள் எனக்கொரு பேர் இருக்கும்' என்று சொன்ன புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடலுக்கிணங்க, தமிழகத்தின் இருபெரும் தலைவர்களான எம்.ஜி.ஆர். மற்றும் அம்மா அவர்களை வணங்கி, இன்று சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.

2017 ஜூன் 29]

நேர்கோட்டிலே நடுநிலை தவறாமல் இந்தச் சபையை நடத்திக்கொண்டிருக்கிற மாண்புமிகு சபாநாயகர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் தொகுதியில், குண்டவெளி என்பது எனது கிராமம். தஞ்சை–சென்னை நெடுஞ்சாலையில் குண்டவெளி ஊராட்சியில் மீன்சுருட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. அந்த மீன்சுருட்டி பகுதியில்தான் மிக அதிகமாக சாலை விபத்துகள் நடைபெறுகின்றன. சாலை விபத்துகள் நடைபெறுகின்றபோது, அந்த மீன்சுருட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் எந்தவித சிகிச்சையும் அளிக்க முடியவில்லை. ஜெயங்கொண்டம் சென்றாலும், தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிடுவார்கள். எனவே, மீன்சுருட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்தித் தரவும், ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் ஒரு Ortho Doctor posting create செய்து நியமனம் செய்திடவும், மலை குலைந்தாலும், நிலைகுலையாத மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல தமிழ்நாடு முழுவதும் விபத்துகள் அடிக்கடி நடைபெறுகிற இடங்களை digital mapping செய்து, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களோடு எல்லாம் கலந்து பேசி, எங்கெல்லாம் அதிக விபத்துகள் நடைபெறுகிறதோ, அந்தக் கணக்கீட்டின்படி, தேசிய நெடுஞ்சாலை, அதற்குப்பிறகு மாநில நெடுஞ்சாலை, அதுபோல முக்கியச் சாலைகளிலே, சாலையோரங்களிலே இருக்கக்கூடிய அந்த மருத்துவமனைகளை, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் மீன்சுருட்டி போன்ற மருத்துவமனைகளையெல்லாம் தேர்ந்தெடுத்து, விபத்துக் காய சிகிச்சை மையங்களாக அவற்றைத் தரமுயர்த்துகின்ற அந்த ஆரம்பக் கட்டப் பணிகள் துறைரீதியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த வகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த மீன்சுருட்டி மருத்துவமனையைத்

தரமுயர்த்திடவும், Ortho மருத்துவரை நியமனம் செய்திடவும் அரசின் மூலமாக, சாதகமாகப் பரிசீலனை செய்து, விரைவில் அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தையாபுரம் பகுதியில் கூலித் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், உப்பளத் தொழிலாளர்கள் அதிக அளவில் வசித்து வருகின்றனர். அந்தப் பகுதி மக்களின் அவசரகால மருத்துவ உதவிக்கு தனியார் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய ஒரு நிலையுள்ளது. ஆகவே, வார்டு எண் 51 மற்றும் வார்டு எண் 52–வது பகுதியில் நகர்ப்புற சுகாதார மையம் அமைத்துக் கொடுத்தால், அப்பகுதி மக்களுக்குப் பயன்தரத்தக்கதாக அமையும் என்பதால் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை வலியுறுத்த விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Urban Health Centres எங்கெல்லாம் தேவைப்படுகிறதோ, அங்கெல்லாம் துவக்குவது என்பது அரசினுடைய கொள்கை முடிவு. குறிப்பாக, நகர்ப்புறத்தில் ஒரேயொரு சவாலாக இருப்பது இடப் பிரச்சினை மட்டும்தான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கோரிக்கையை நிச்சயமாக அரசு கனிவோடு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட கிள்ளியூர் ஊராட்சி*

ஒன்றியத்தில், கிட்டத்தட்ட 14 பஞ்சாயத்துகள் இருக்கின்றன. இந்தப் பகுதிகளில் மக்கள் நெருக்கடியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அதிகமான அளவில் போக்குவரத்து நெருக்கடி இருக்கின்ற காரணத்தினாலும், அங்கே பள்ளி, கல்லூரிகளுக்குச் செல்கின்ற மாணவ, மாணவிகள் அடிக்கடி விபத்துக்குள்ளாகின்றார்கள். ஆகவே, அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள மக்களைக் காப்பாற்றுவதற்கு, கருங்கல் அரசு மருத்துவமனையில் 108 ஆம்புலன்ஸ் வசதியை ஏற்படுத்தித் தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதிக்கு இந்த வாரமே உடனடியாக புதிய ஆம்புலன்ஸ் வழங்கப்படும் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.

திரு. க. கார்த்திகேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி, மணலூர்பேட்டை பேரூராட்சி, சுமார் 15 ஆயிரம் மக்கள்தொகையைக் கொண்டது. அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் சுமார் 10 ஆயிரம் பேர் வசிக்கின்றனர். இவர்கள் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்றால், அங்கிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் பயணம் செய்து, திருக்கோவிலூர் அல்லது திருவண்ணாமலைக்குத்தான் செல்ல வேண்டும். ஆகவே, மணலூர்பேட்டை பேரூராட்சியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்த இந்த அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[*2017 ஜூன் 29*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் மட்டும் 129 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரமுயர்த்தப்பட்டிருக்கின்றன.ஒவ்வொருஊராட்சிஒன்றியத்திற்கும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தேர்ந்தெடுக்கப்பட்டு, தரமுயர்த்தப்படுகின்றது. இதற்கு அடுத்தக்கட்டமாக, இதுபோன்ற முன்னுரிமை அடிப்படையிலே, தேவைப்படுகின்ற இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்துவதற்கு அரசு திட்டமிட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அரசு ஆய்வு செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 106, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

106—

தொழிற்கல்வி பயிற்சி மையம்

***22896—திரு. ஆர். நடராஜ்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மயிலாப்பூர் தொகுதியில் பெண்கள் மற்றும் இளைஞர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக தொழிற்கல்வி பயிற்சி மையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மயிலாப்பூர் தொகுதியில் உள்ள பெண்கள் மற்றும் இளைஞர்களின் பொருளாதார மேம்பாட்டிற்குத் தொழிற்கல்விப் பயிற்சியை வழங்க தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் தயாராக உள்ளதால், புதிதாக ஒரு தொழிற்பயிற்சி மையம் மயிலாப்பூர் தொகுதியில் அமைக்க வாய்ப்பில்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.